23rd July 1962]

திரு. கே. டி. கோசல்ராம் : இதுவரையில் பரிசீலனையே செய்யப்படவில்லை. கடந்த ஏழு வருஷகாலமாக இப்படி அந்த நகரத்து ஜனங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே, அதற்கு அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பரிசீலனை செய்யப்படவில்லையென்று சொல்லவில்லை. அது பரிசீலனையில் இருக்கிறது என்றே சொல்கிறேன்.

* 527 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் தேசிய குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் நெல்லை ஜில்லாவில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் எவை?

(இ) அவைகள் எல்லாம் பூர்த்தியாகி விட்டனவா?

(உ) இல்லையென்றால் காரணமென்ன?

THE HON. SRIMATHI **JOTHI VENCATACHELLUM :** (அ) During the year 1960–61 the Government approved 54 additional villages for providing water-supply and sanitation facilities under the National Water-Supply and Sanitation (Rural) Scheme in Tirunelveli district.

(இ) Works in 26 villages have either been completed or nearing completion.

(உ) The availability of financial assistance from Government of India for the scheme during the Third Plan period was uncertain. Preference was therefore given to the completion of works which had been started and works in the additional villages selected under the scheme in the Tirunelveli district could not be taken up for execution during the year 1961.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து, புதிதாகச் சேர்க்கப்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் இதுமாதிரி தேசிய குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் பலன் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. மத்திய சர்க்காரிடமிருந்து மானியம் வராத காரணத்தால்தான் பாக்கி கிராமங்களுக்கும் இந்தத் திட்டம் நீடிக்கப்படவில்லை என்று சொல்லப்படுவதால், மறுபடியும் மத்திய அரசாங்கத்திடம் இந்த அரசாங்கம் முறையிட்டு, இந்தத் திட்டத்தினுடைய பலனை அடைவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மத்திய அரசாங்கத்திற்கு இதுபற்றிய தகவல் நம்முடைய ராஜ்யத்திலிருந்து ஏற்கனவே போயிருக்கிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து பதில் வந்த பிறகு, கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதும் கவனிக்கப்படும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஆற்றோரமாக இருக்கக்கூடிய தொத்து வியாதிகளுக்கு உட்பட்டிருக்கும் கிராமங்களுக்குத்தான் இந்தத் திட்டத்தினுடைய பலன் கிடைக்கும் என்பது அரசாங்கத்தினுடைய தகவலிலிருந்து தெரிய வருகிறது. அப்படியானால்,

மத்திய அரசாங்கத்தினுடைய பங்குத் தொகை 95 சத விகிதமும், கிராம மக்களின் பங்குத் தொகை 5 சத விகிதமும் என்ற அளவில் இந்தத் திட்டம் நிறைவேறுவதாக இருக்கிறது. பக்கத்து கிராமங்களில் நம்முடைய ராஜ்யத்தின் திட்டப்படி 25 சத விகிதம் பங்குத் தொகை கட்டும்படியான நிலைமை இருப்பதாலும், அது வும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிறைவேறுமல் இருக்கிற இடங்களில் 5 சதவிகிதம் மட்டும் கட்டக்கூடிய நிலைமை பக்கத்து கிராமங்களில் இருப்பதால், மத்திய சர்க்காரின் மான்யம் வரா விட்டால்,, ராஜ்ய சர்க்காரே அந்தப் பொறுப்பையும் எடுத்து, மக்களின் உதவி 5 சதவிகிதம் என்ற நிலையில் சேர்க்கப்பட்ட ஊர் களின் திட்டங்கள் நிறைவேற்றப்படுமா ?

MR. SPEAKER: The question seems to be very long.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: It cannot be taken into consideration.

மின்சார விஸ்தரிப்பு (குடியாத்தம் தாலுகா).

* 528 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) குடியாத்தம் தாலுகாவில் மின்சார விஸ்தரிப்பு செய்ய போடப்பட்டுள்ள திட்டங்களில் அமுலாக்கப்படாமல் உள்ளவை எத்தனை ?

(இ) அதற்குரிய காரணங்கள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The attention of the hon. Member is invited to the statement [a] placed on the table of the House.

மின்சார விஸ்தரிப்பு அதிகாரிகள்.

* 529 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இம்மாநிலத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன் றுக்கும் மின்சார விஸ்தரிப்பு அதிகாரிகள் நியமிக்க உத்தேச முண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN: A suggestion to this effect made by the *Ad hoc* Committee on Rural Electrification is under examination of the Government.

Gramasevaks

* 530 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to appoint the Gramasevaks as Executive Officers in Class II panchayats?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

---

a Brinted as Appendix I on pages 122–123.